Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 12


















# INDEX


| | |
|---|---|
| PERMANENT FAME | 1-8 |
| PERFECT CRITIC | 9-17 |
| POWERFUL GHOST | 18-27 |
| RAINING GOLD | 28-33 |
| RECOVERY OF LOAN | 34-41 |
| TUMMY TROUBLE | 42-48 |


நிரந்தரமான புகழ்


சில வருடங்கள் முன்னால் இந்தியா முழுவதும் பௌத்த மதம் வெகுவாகப் பரவி இருந்தது.
அவந்தியின் மன்னன் சித்ரசேனன் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவன்; அவன் அவனது நேர்மை மற்றும் வாய்மை காரணமாக அனைத்து மக்களின் மதிப்பையும் பெற்றிருந்தான்.
நாம் இந்த ராஜ்ஜியத்தில் வாழ்வதற்கு மிகவும் அதிர்ஷ்டம் செய்திருக்கிறோம்.
ஆம் நண்பா, மன்னர் சித்திரசேனன் மிகவும் பெருந்தன்மையான குணம், அன்புள்ளம் கொண்டவர் மற்றும் சிறந்த நிர்வாகி.
மாளவ ராஜ்ஜியம் அவந்தியின் அருகில் இருந்தது. மன்னன் சிம்ஹபல் சித்திரசேனனுக்கு நேர் எதிரானவன். அவன் கொடுமைக்காரனாகவும் ஆணவம் கொண்டவனாகவும் இருந்தான்.


மன்னன் சித்திரசேனனின் போதனையால் மாளவ மக்கள் அவனை மதிப்புடன் கருதினர்.
மன்னன் சிம்ஹபல் தனது அண்டை நாட்டு மன்னனின் புகழைக் கேள்விப்பட்டு கோபமடைந்தான்.
அமைச்சரே, பௌத்த மதத்தைப் பின்பற்றும் மக்கள் அனைவரையும் தண்டியுங்கள்.
பௌத்த மதத்தைப் பின்பற்றும் அனைவரையும் தண்டிக்க வேண்டும் என்பது நம் மன்னரின் ஆணை.
அடக் கடவுளே, என்ன ஒரு அவமானம். நமது விருப்பத்திலான மதத்தைக் கூட நம்மால் பின்பற்ற முடியவில்லையே.
அமைச்சரே, நாம் சித்திரசேனனின் புகழ் பரவாது நிறுத்தவேண்டும். அவர்கள் மீது போர் தொடுங்கள்.


மன்னா, மன்னர் சித்திரசேனன் ஒரு நேர்மையான மனிதன். அவர் நம்மைத் துன்புறுத்தாத பட்சத்தில் நாம் ஏன் அவர்மீது போர் தொடுக்க வேண்டும்?
இது என் ஆணை...
மாளவ வீரர்கள் அவந்தி ராஜ்ஜியத்தைத் தாக்கினர்.
இந்த கடிதத்தை உங்கள் மன்னரிடம் கொடுங்கள்.
வீரர்கள் மன்னன் சிம்ஹபலிடம் கடிதத்தை கொடுத்தனர். அவன் அதனை வாசிக்கிறான்....
ஏன் எங்கள் மீது போர் தொடுத்துள்ளீர்கள்? நாங்கள் ஒரு மதத்தைப் பின்பற்றுவதால் பிற மதங்களை அவமதிக்கிறோம் என்று அர்த்தமில்லை. இந்த போரை நிறுத்துமாறு நாம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். நான் இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்புடன் இருப்போம்.
மீண்டும் அவர்கள் மீது போர் தொடுங்கள்


மன்னன் சிம்ஹபல் சித்திரசேனனைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான். அவன் தனது அமைச்சர் கார்த்திகேயனை அவந்தி ராஜ்ஜியத்தை கவனிக்குமாறு கூறி, தனது நாட்டிற்குத் திரும்புகிறான்.
கார்த்திகேயன் ஒரு யோசனை தோன்றிற்று...
அமைச்சர் கார்த்திகேயனுக்கு அவந்தி மக்கள் மன்னர் சித்திரசேனனையே விரும்புகின்றனர் என்பதை விரைவிலேயே அறிந்துகொள்கிறார்.
கார்த்திகேயன் மன்னன் சிம்ஹபல்லிடம் செல்கிறார்.
மன்னா, நீங்கள் சிறிது காலம் அவந்தியில் தங்கி ஆட்சி புரிய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.


மன்னன் சிம்ஹபல் மாறுவேடம் பூண்டு மக்களின் மனநிலையை அறிந்துகொள்வதற்காக அங்குள்ள தெருக்களில் நடந்து சென்றார்.
ஏன் இங்கு தூங்குகிறீர்கள். மிகவும் குளிராக உள்ளது. உங்களிடம் போர்வை கூட இல்லையே.
இளைஞனே, கொடுமைக்கார மன்னன் சிம்ஹபல்லின் காரணமாக நாங்கள் இந்த நிலைமையில் இருக்கிறோம்.
எனது மகன் அவந்தி படையில் இருந்தான். போருக்கு முன்பு வரை நாங்கள் மகிழ்ச்சியாக இருந்தோம். என் மகன் என்னை மிகவும் நன்றாகவே கவனித்துக் கொண்டான்.


போரில் என் மகனை நான் இழந்துவிட்டேன். என்னைப்போலவே இன்னும் பலர் எல்லாவற்றையும் இழந்துள்ளனர்.
நாங்கள் மன்னர் சித்திரசேனனின் ஆட்சியில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம். அவர் ஒரு நேர்மையான மனிதர். மன்னன் சிம்ஹபல் எல்லாவற்றையும் அழித்துவிட்டான்.
அனைவருமே அவனது செயலைத் தூற்றுகின்றனர். அவன் இறந்த பிறகும் அவன் கைப்பற்றிய அனைத்து ராஜ்ஜியங்களையும் அவனால் கொண்டு செல்ல முடியுமா?
ஒரு நேர்மையான அரசன் என்பவன் மக்களின் மனோநிலையைப் புரிந்தவனாக இருப்பான். இத்தகைய அரசர் நீடித்து ஆட்சி புரிந்து நிரந்தரமான புகழைப் பெறுவர். மன்னன் சிம்ஹபல்லிடம் இதனை யாராவது எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.


மன்னன் சிம்ஹபல் தலைகுனிந்து திரும்பிச் சென்றான்.
எனது செயலுக்காக என்னை மன்னித்துவிடு நண்பா, உனது ராஜ்ஜியத்தை மீண்டும் எடுத்துக்கொள்.
வயதான மனிதனைச் சந்தித்தது மன்னன் சிம்ஹபல்லின் கண்களைத் திறந்தது. அன்றிலிருந்து அவன் ஒரு மாறுபட்ட மனிதனாக வாழ்ந்துவந்தான்.
அவன் பௌத்த மதத்தைப் பின்பற்றத் தொடங்கினான் மற்றும் சில வருடங்கள் கழித்து அவன் மிகவும் புகழ் பெற்று ஆட்சிபுரிந்தான்.

# சரியான விமர்சகர்




மன்னர் ஜார்ஜ் பரோவியா நாட்டை  ஆட்சி செய்து வந்தார்.
அவர் மிகவும் திறமைசாலி மற்றும் அண்டை நாடுகளுடன் நல்ல நட்புறவு  கொண்டிருந்தார். பரோவியா ஒரு அமைதியான மற்றும் வளமையான நாடாகத் திகழ்ந்தது.
மன்னர் ஜார்ஜ் கலை மீது அளப்பரிய ஆர்வம் கொண்டிருந்தார்.
பெரும் ஓவியக் கலைஞர்கள், பாடகர்கள் மற்றும் பிற கலை வல்லுநர்கள் அவரது அரசவையை அலங்கரித்தனர்.


அவருக்கு பாடல்களிலும் பெரும் ஈடுபாடு உண்டு. அவர் பெரும் புலவர்களை அழைத்து மரியாதை செய்வது வழக்கம்.
ஹெய்டன் அனைத்து புத்தகங்களையும் வாசித்து அதனை விமர்சித்து எழுதி மக்களுக்குத் தெரிவிப்பான்.
ஹெய்டன் மக்களுக்கு புத்தகங்களைப் பற்றி, அந்த புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களை விடச் சிறப்பான முறையில் இனிமையாகவும் மற்றும் எளிமையாகவும் எடுத்துரைப்பான்.
மெதுவாக ஹெய்டன் விமர்சனம் செய்த புத்தகங்களை எல்லாம் மக்கள் படிக்கத் துவங்கினர்.


மக்களுக்கு அவனை மிகவும் பிடித்துப் போயிற்று.
அவனுக்கு பெரும் மதிப்பும் மரியாதையும் கிடைத்தது.
ஆஹா!! ஹெய்டன் உண்மையிலேயே திறமைசாலி.
புலவர்கள் தங்களது பாடல்களைப் பற்றிய சிறப்புக்கள் பற்றிக் குறிப்பிடுகையில் ஹெய்டனையும் சுட்டிக்காட்டத் துவங்கினர்.
சில பெரும் ஞானம் கொண்ட புலவர்கள் ஹெய்டனின் விமர்சனத்தை நேர்மறையாக எடுத்துக்கொண்டு தங்களது படைப்புகளை மேம்படுத்தத் துவங்கினர்.
ஹெய்டன், உன்னுடைய விமர்சனம் உண்மையிலேயே எங்களுக்கு உதவிகரமானதாக இருக்கிறது.
ஹெய்டனின் விமர்சனம் மக்களிடையே நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது; மக்கள் கலை மற்றும் புலமையின் மீது ஆர்வம் காட்டத் துவங்கினர்.


சில பொறாமைகொண்ட புலவர்கள் மன்னர் ஜார்ஜிடம் புகார் கூறினர்.
மன்னா, ஹெய்டன் எங்களது படைப்புகளை விமர்சனம் செய்து அவமானப்படுத்துகிறார். அவர் இதனை நிறுத்தவில்லை என்றால் நாங்கள் பாடல்கள் எழுதுவதையே நிறுத்திவிடுவோம். அதன் பின்னர் இந்த அரசவையில் இருந்து கலை முற்றிலும் அழிந்துவிடும்.
கவலைப்படாதீர்கள், நான் அவனை எச்சரிக்கிறேன்.
மன்னர் ஜார்ஜ் ஹெய்டனை தனது அரசவைக்கு அழைக்கிறார்.
ஹெய்டன், நீ பிற புலவர்களை விமர்சிக்கிறாய் என்று என்னிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மன்னா, எனது எண்ணம் மற்றவர்களின் படைப்புக்களை கிண்டல் செய்வதோ அல்லது அவமானப்படுத்துவதோ கிடையாது. அவற்றை விமர்சனம் செய்து அதில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி அவர்களது படைப்புத் திறமையை மேம்படுத்துவது ஆகும்.


விமர்சனம் இல்லாத எந்த ஒரு புத்தகமும் சிறந்தது இல்லை; மக்கள் படைப்புக்களிலுள்ள குறை நிறைகளை அறிந்து எந்த படைப்பு சிறந்து என்று முடிவு செய்ய வேண்டும்.
சிறந்த படைப்புகள் தவறான விமர்சனங்களுக்கு இடங்கொடுக்காது மக்களின் மனதில் நீண்ட காலம் வாழும்.
நீ கூறுவது சரிதான். ஆனால் நல்ல படைப்பு கூட உன்னுடைய தவறான விமர்சனத்தால் மோசமானதாகிவிடும். உனது விமர்சனத்தைப் பற்றி மக்கள் கூறிக் கேட்டிருக்கிறேன்.
இது எங்களது தலைமைப் புலவர் பவன் ஷர்மாவால் எழுதப்பட்டது, நீ இந்தப் புத்தகத்தை விமர்சனம் செய்ய வேண்டும்.
மன்னா, எனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் வேண்டும்
OK.


இரண்டு நாட்கள் கழித்து.
மன்னா, இந்தப் புத்தகத்தில் கதாநாயகி பாத்திரம் தனது தலையில் மல்லிகைப் பூவைச் சூடுவதாக வருகிறது, ஆனால் குளிர்காலத்தில் மல்லிகைப்பூ கிடைக்கப்பெறாது. இத்தகைய சிறிய நுணுக்கங்கள் புலவரால் தவறவிடப்பட்டிருக்கின்றன.
ஹெய்டன் அந்த புத்தகத்தில் பல தவறுகளைச் சுட்டிக்காட்டினான்.
நான் ஒப்புக்கொள்கிறேன், நீ பிறரது படைப்புக்களை விமர்சனம் செய்வதற்குப் பதிலாக, நீயே ஏன் படைப்பினை உருவாக்கக்கூடாது?
நான் பிறரது படைப்புக்களை விமர்சனம் செய்யலாம், ஆனால் புதிதாக உருவாக்க முடியாது.
உன்னால் பாடல்கள் எழுத முடியாது என்றால் உனக்கு விமர்சனம் செய்யவும் உரிமை கிடையாது.


அதன் பின்னர், அவையிலுள்ள ஒருவர் அரசவைக்கு வந்து ஒரு பெட்டி நிறைய துருக்கிய இனிப்புக்களைக் கொண்டு வந்தார்.
இதன் சுவை எவ்வாறு உள்ளது அரசே?
இது உனக்குத் தெரியாதா? இனிப்பாக இருக்கிறது.
மன்னா நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?
ஆம்.
உங்களுக்கு இனிப்புக்கள் தயாரிப்பதற்கு தெரியுமா?
இல்லை, நான் ஏன் கற்றுக்கொள்ள வேண்டும்?


என்னை மன்னியுங்கள் மன்னா. உங்களால் இனிப்பினை செய்யத் தெரிந்திருக்காத போது உங்களால் எவ்வாறு அதன் சுவையை முடிவு செய்யமுடியும்
ஒவ்வொரு மனிதரும் இனிப்பினை உண்டு அதன் சுவையைப் பற்றிக் கூறலாம். இதற்கு அதனை செய்யத் தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.
மன்னா, இதே போல்தான், ஒவ்வொரு மனிதருக்கும் விமர்சனம் செய்ய உரிமை உண்டு. அவர்களுக்குப் பாடல்கள் எழுதத் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.
மன்னர் தன்னுடைய தவறை உணர்ந்தார். மன்னர் ஹெய்டனை பெருமைப்படுத்தினார்.
முற்றிற்று

# சக்தி வாய்ந்த பேய்




ஐயா வணக்கம், என் பேர் சதீஷ், மங்கிபூர் லே இருந்து வர்றேன். நம்ம கிராமத் தலைவர் இந்த கடிதாஸி யை உங்களுக்கு கொடுத்தார்.
ஹூம்... ஆக நீ வேலெ பாக்க வந்திருக்கிறே. சரி, வேலெ கொடுக்கிறேன், மொதல்ல நீ உன்னே நிரூபிக்கணும்.
என் வெளி வீட்டிலிருக்கிற பேய விரட்டணும்.
ரொம்ப நல்லதய்யா, நான் முயற்சி செய்றேன்.



அந்த வெளி வீடு எங்கே இருக்கு ?
இந்த தெருக்கோடில இருக்கு. பாவம் ஐயா, அவர் நல்லா பணம் செலவு பண்ணி இந்த வீட்ட வாங்கினார் ... ஆனா இருந்தும்
ஒரு வாரம் கழிச்சி தான் அவருக்கு தெரிந்தது, இது பேய் பிடித்த வீடுன்னு. ரொம்ப பேர் வந்து பேய விரட்ட என்னென்னவோ செஞ்சாங்க, ஆனா, ஒண்ணும் நடக்கல.
ஓஹோ, அப்படியா ...
அவர் வெளிவீட்டிற்கு போனோம்.


பீட்டர் வீட்டிற்குள் நுழைகிறான்.
பீட்டருக்கு களைப்பாக இருந்ததால், அவன் நாற்காலியில் தூங்கிவிட்டான்.
திடீரென்று பீட்டர் பேய் மூலம் திடுக்கிட்டு எழ...


உனக்கு எவ்ளோ தைரியமிருந்தா இந்த வீட்டுக்கு வந்திருப்பே ?
செத்துபோன நீயே இங்கே சந்தோஷமா வாழும் போது, உயிரோட இருக்கிற நான் ஏன் பயப்படணும் ?
என் அண்ணன் தம்பிங்க இங்கே யாரையாவது உயிரோடு பாத்தா, அவன் கழுத்த நெரிச்சி கொன்னுடுவாங்க.
அவங்க வர்றதுக்கு முன்னாடி நீ இங்கேயிருந்து போய்டு.
நீங்க எல்லாம் எத்தனை பேர் அண்ணன் தம்பீங்க, நீ சின்னவனா என்ன ?


நாங்க மூணு அண்ணன் தம்பிங்க, நான் நடுப்பையன்.
உன் பேர் என்ன ?
நான் உயிரோடு இருக்கும் போது எனக்கு பேர் இருந்திச்சி, இப்ப நான் ஒரு பேய், இதெல்லாம் உனக்கு எதுக்கு, போ இங்கிருந்து.
எனக்கு ரொம்ப தூக்கம் வருது. நான் தூங்க போறேன். உன் சகோதரங்கோ வரும் போது பாக்கலாம். அது வரைக்கும் என்னெ தொந்தரவு பண்ணாதே.
பேய் பீட்டரை எரிச்சலூட்ட முயற்சிக்கிறது


என்னெ குத்தாதே. என் அண்ணன் தம்பி கிட்டெருந்து உன்னெ காப்பாத்த தான் முயற்சிக்கிறேன். நான் மரத்திலே இருக்க காட்டு பக்கம் போய்க்கினே இருந்தேனா, என் அண்ணே என்னே இங்கே புடிச்சிகிட்டு வந்தாரு.
என் தம்பி ஊர்க்கு வெளியே கீதே அந்த பளைய பங்க்ளாலே சந்தோஷமா வாழ்ந்து கினு இருந்தான், அவனும் கட்டாயமா இங்கே வரவேண்டியதாச்சி....
ஓஹோ.... பேய் வர்க்கத்திலே கூட உங்க கிட்ட அடிமை கள் இருக்காங்க
ஆமா, இது உன் கடந்த வாழ்க்கையிலே நிறைவேறாத ஆசைகளைப் பொருத்தது. சக்தி வாய்ந்த உன்னுடைய நிறைவேறாத ஆசைகள், நீ செத்த பின் உன்னே சக்தி வாய்ந்த பேயாக்கிடும், உதாரணத்துக்கு எங்களே எடுத்துக்கோ.


மற்றவங்க மாதிரி நான் படிக்கலே. இந்த ஆசையோட நான் செத்து போனே. நல்லா படிச்சிகிட்டிருந்த என் தம்பி, தான் விரும்பிய பொண்ணே கட்ட முடியாம போனதனால தூக்கு போட்டுகிட்டான்.
என் அண்ணே எங்க கிராமத்துக்காக சண்டே போட்டான். அவனெ தூக்கு போட்டு கொன்னுட்டாங்க.
பின்னர் மற்ற இரண்டு சகோதரர்கள் வருகின்றன.
ஏன் அவங்கிட்ட பேசிகிட்டிருக்கே, யார் ரா அவன்?


நாங்க சும்மா கப்ஸா அடிச்சிகிட்டிருக்கோம்
என்ன தைரியம்டா உனக்கு என் கிட்ட பேச ? இப்பவே நான் உன்னே கொல்ல போறேன்.
அதைப்பத்தி கொஞ்சமும் யோசிக்காதே, பிறகு நீ சிக்கல்ல மாட்டிக்கிவே.
என்ன சொல்லுகிறீர்கள்?


சரி, நான் விளக்கமா சொல்றேன். நான் ஒரு ஏழை. எனக்கு உடுத்திக்க நல்ல துணி இருந்ததில்லே, நல்லா சாப்பிட்டதில்லே, ஒரு நல்ல வீடு இல்லே, ஆனா முக்கியமா கடைசில இளவரசியெ கல்யாணம் பண்ண ஆசை.
இப்ப நான் செத்தா, என்னோட எல்லா ஆசை களும் நிறைவேறாம போயிடும். அப்போ, நான் தான், நமக்குள்ளே சக்தி வாய்ந்த பேயாக இருப்பேன். நீங்க எல்லாரும் எனக்கு அடிமையாய் இருப்பீங்க.
இல்லை, நீங்கள் சாகக்கூடாது
இத பாருங்க, இப்ப இங்கெ ஒண்ணு நீங்க இருக்கணும்,இல்ல நான் இருக்கணும்...
ஓஹோ, நீ தயவு செய்து இங்கேயே இரு. நாங்க போறோம்.
இப்போது வீட்டுக்கு பேயிடமிருந்து விடுதலை
எல்லாத்துக்கும் நன்றி பா, உனக்கு வேலையும் உண்டு, நீ இந்த வீட்ல இருக்கலாம்..
இறுதியில்


தங்க மழை


மன்னன் பிலிப் எப்போதுமே மக்களின் நலன் மற்றும் வளத்தைப் பற்றியே சிந்திக்கும் ஒரு மாமன்னர்.
சுமார் ஒரு வருடமாக, அந்த கிராமத்தில் பெரும் வறட்சி இருந்து வந்தது.
மக்களிடமிருந்து எந்தவிதமான வரியையும் பெற வேண்டாம், அதற்குப் பதிலாக அவர்களுக்கு 5 தங்கக்காசுகளை அளியுங்கள். அதன் மூலம் அவர்கள் பிரச்சினையின்றி வாழ்வர்.
சில நாட்கள் கழித்து...
நமது மக்களின் நிலை என்ன? அரசு கருவூலத்திலிருந்து அவர்களுக்குப் போதுமான அளவு உதவி கிடைக்கப்பெறுகிறதா?


ஆம் மன்னா! நாங்கள் உதவி செய்கிறோம். ஆனால் ஆச்சரியப்படும் விதமாக சில மக்கள் பிழைப்புத் தேடி ராஜ்ஜியத்தை விட்டு பக்கத்து ராஜ்ஜியத்திற்குச் செல்கின்றனர்.
இது உண்மையிலேயே துரதிர்ஷ்டவசமானது. என்னால் எனது மக்களை சரிவர கவனித்துக்கொள்ள முடியவில்லையா?
நான் மாறுவேடம் பூண்டு நம் நாட்டை வலம் வந்து என்ன பிரச்சினை என்பதைக் கண்டறிய வேண்டும்.
அடுத்த நாள் மன்னர் ஒரு சாதாரண மனிதன் போல வேடம் பூண்டு ஆற்றங்கரை அருகில் சென்று யாரேனும் ராஜ்ஜியத்தை விட்டுச் செல்கிறார்களா என்று பார்த்தார்.


சில விவசாயிகள் படகில் ஏறிச் சென்றபோது மன்னரும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனிக்க அதில் ஏறிச் சென்றார்.
PSSS...PSSS...PSSS.....
அவர்கள் தாங்கள் பணி நிமித்தமாகவே செல்வதாகக் கூறியதைக் கேட்டு மன்னர் சற்றே நிம்மதியடைந்தார்.
நமது மன்னர் ஒரு கடவுள் போல இருக்கிறார், ஆனால் நமது கிராமத்தில் மழை ஏதும் பெய்யவில்லையே?
என்ன கூறுகிறாய்? நமது மன்னர் மழைக்கடவுள் போன்றவர்; அவர் எப்போதுமே அவரது ஆசிகளை வழங்கி வருகிறார்.
அது எப்படி?
கடவுள் மழையைக் கொடுக்கிறார்; மன்னரோ நமக்கு தங்கமழை பொழிகிறார்.


நன்கு கூறினீர்கள்.
பருவகாலங்களில் கடவுள் மழை தருகிறார். ஆனால் மன்னரோ வருடம் முழுவதும் நமக்கு அள்ளிக் கொடுக்கிறார்.
மக்களின் அன்பினைக் கண்டு மன்னர் பிலிப்பின் கண்கள் கண்ணீரால் நிரம்பிற்று. அவரது மனம் முழுவதும் பெருந்தன்மையும் மகிழ்ச்சியும் நிரம்பி வழிந்தது.
அங்கிருந்த அனைத்து விவசாயிகளிடையே ஒருவன் மட்டும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.
நன்று! நமது மக்களின் தேவைக்கு ஏற்ப மன்னர் வருடம் முழுவதும் தங்கத்தை அளிக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் சிலருக்கு துரதிர்ஷ்டவசமாக அவர் அளிப்பது கிடைக்கப்பெறுவதில்லை.


மன்னர் பிலிப் இந்த உண்மைப் பற்றி அறிய விரும்பினார்.
நான்தான் மன்னர் பிலிப்
அவர்களிடையே அமர்ந்திருப்பது மன்னர்தான் என்பதை அறிந்ததும் அவர்கள் ஸ்தம்பித்துப் போயினர்.
பயப்படவேண்டாம் எனக்கு உண்மையைக் கூறுங்கள்.
மன்னா, நீங்கள் அன்புடையவராகவும் தயாள குணமுடையவராகவும் இருக்கிறீர்கள். நீங்கள் அனைவருக்குமே உதவுபவர், ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டத்தால் உங்களது உதவி எனக்குக் கிடைக்கப்பெறாமல் போயிற்று.
இதனைக் கேட்டதும் தெரிந்தோ தெரியாமலோ சில மக்களுக்கு உதவி கிடைக்கப்பெறுவதில்லை என்று மன்னர் பிலிப் புரிந்துகொண்டார்.
உதவி செய்தால் மட்டும் போதாது; இனி நான் ஒவ்வொருவரையும் எனது உதவி சென்றடைவதை உறுதி செய்வேன் .
அன்றிலிருந்து, மன்னர் தனிப்பட்டமுறையில் அனைவருக்கும் உதவி கிடைக்கப்பெறுகிறதா என்று சரிபார்த்துக் கொண்டார்.
முற்றிற்று

# கொடுத்த கடனைக் மீட்டல்




சீதாராம் மிகவும் இரக்க குணம் வாய்ந்த மனிதர்; ஊரிலுள்ளவர்கள் யாருக்காவது பணம் தேவை என்றால் உடனே கொடுத்து உதவுவார்.
ஆனால், மிகவும் இளகிய மனம் படைத்தவர் என்பதால் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்க மிகவும் தயங்குவார்.
அவரிடம் கடன் வாங்கிய பலபேர் நீண்ட காலத்திற்குப் பின்னும் அதைத் திருப்பிக் கொடுப்பதே இல்லை. அப்படிப்பட்டவர்களில் கோவிந்த் என்பவனும் ஒருவன்.
ரமணா என்ற அடுத்த ஊரைச் சேர்ந்த ஒரு மனிதனும் சீதாராமிடம் ஒரு வருடத்திற்கு முன் கடன் வாங்கியிருந்தான்.


ஐயா, நான் உங்களிடம் வாங்கிய பணத்தை நீங்கள் இதுவரை என்னிடம் கேட்கவே இல்லையே, அது எப்படி?
நேற்று என்னுடைய கணக்குப் புத்தகத்தை எடுத்துப் பார்த்த பிறகுதான் நான் உங்களுக்குப் பணம் கொடுக்கவேண்டும் என்பது நினைவு வந்தது. அதனால் உங்களிடம் பணத்தைத் திருப்பித்தர வந்தேன்.
கடவுள் என்னுடைய தேவைகளை எல்லாம் கவனித்துக்கொள்கிறார். அதனால் என்னால் கொடுக்கமுடிந்த எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்து உதவுகிறேன். அதை அவர்கள் திருப்பிக் கொடுத்தால் சரி, இல்லாவிட்டால் அது தானமாக இருந்துவிட்டுப் போகட்டும்.
கடனைத் திருப்பி வசூலிப்பது எனக்கு உகந்தது அல்ல.
என்ன சொல்லுகிறீர்கள்?


நான் சொல்வதைக் கேள், ஒருமுறை நான் என் நெருங்கிய உறவினர் ஒருவருக்குப் பணம் கொடுத்தேன். சிறிது காலத்திற்குப்பின் அவருக்கு அதை நினைவுபடுத்தினேன். அது அவருக்கு சங்கடத்தை உண்டாக்கிவிட அந்த உறவு அற்றுப்போனது.
நான் என் பணத்தோடு அந்த உறவையும் இழந்துவிட்டேன்.
ஐயா, எல்லாரும் உங்கள் உறவினரை ப்போல இருக்க மாட்டார்கள்.
அந்த ஒருவர் மட்டுமல்ல, என் நண்பர் இன்னொருவரிட மும் இதே மாதிரி கசப்பான அனுபவம் ஏற்பட்டது.


நான் காசைத் திருப்பிக் கேட்டு நினைவுறுத்திய போது எங்கள் நட்பு உடைந்து போனது.
அப்படியானால் அவர் உண்மையான நண்பர் இல்லை என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.
காரணம் என்னவாக இருந்தாலும் நீங்கள் உங்கள் பணத்தைத் திருப்பிக் கேட்பதை நிறுத்தக்கூடாது.
மற்றொரு சம்பவத்தில் நான் பணத்தைத் திருப்பிக் கேட்டபோது அவர் கோபமுற்று, இன்னொருவரிடமிருந்து கடன் வாங்கி என்னுடைய பணத்தைத் திருப்பிக் கொடுத்தார்.
நீங்கள் ரொம்ப நல்லவர், உங்களுடைய பணத்தைத் தாமதமாகத் திருப்பிக் கொடுப்பதற்காக நான் வருத்தப்ப டுகிறேன்.


நீங்கள் கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்குவதில் உங்களுக்கு என்னுடைய உதவி தேவையென்றால் சொல்லுங்கள். உங்களுக்கு உதவுவது எனக்கு நிச்சயம் மகிழ்ச்சி தரும்.
விட்டுவிடு ரமணா... கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்பது எனக்கு நல்லதில்லை.
இந்தப் பிரச்சனையை என்னிடம் விடுங்கள்...
சரி, நீ வற்புறுத்துவதால் நான் ஒத்துக்கொள்கிறேன். கோவிந்திடம் நான் கொஞ்சம் பணம் கொடுத்திருக்கிறேன். என் பெயரைப் பயன்படுத்தாமல் நீ அதை வாங்கவேண்டும்.


ரமணா கோவிந்தின் வீட்டுக்குச் செல்கிறான்.
கோவிந்த் நாம் இருவரும் சீதாராமின் வீட்டுக்குச் சென்று பணம் கடன் திரும்பக் கேட்கிற விஷயத்தில் அவர் இவ்வளவு நல்லவிதமாக நடந்துகொள்ளக்கூடாது என்று சொல்லலாம் வா. பேச்சில் அவர் இன்னும் சற்றுக் கடுமையாக இருக்கவேண்டும்.
கோவிந்த் சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவனாக வீட்டின் உள்ளே செல்கிறான்.
இரு, நான் இப்போது வந்துவிடுகிறேன்.
வா, நாம் போகலாம். நானும் அவருக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும்.
ஓ நல்லது.... என்னுடைய திட்டம் பலித்துவிட்டது
கோவிந்த் ஐநூறு ரூபாயை சீதாராமிடம் கொடுக்கிறான்.
ஐயா, நான் உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும், ஆனால் நீங்கள் அதைத் திருப்பிக் கேட்கவே இல்லை. ஆனால், நான் நகுலிடம் அறுநூறு ரூபாய் கடன் வாங்கினேன் அவன் அதனால் என்னை மிகவும் கஷ்டப்படுத்துகிறான்.


ஐயா, நான் ஐநூறு ரூபாய் புரட்டிக் கொண்டுவந்திருக்கிறேன். நீங்கள் எனக்கு இன்னும் ஒரு நூறு ரூபாய் கொடுத்தால் நான் அதை அவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவேன்... உங்கள் பணத்தை அடுத்ததாக நான் கட்டாயம் கொடுத்துவிடுவேன். நீங்கள் மிகவும் இரக்கமுடைய மனிதர் என்னுடைய பிரச்சனையை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கிறேன்..
கோவிந்துக்கு சீதாராம் நூறு ரூபாய் கொடுக்க அதைப் பார்த்த ரமணா அதிர்ச்சியடைகிறான்.
ஐயா, என்னை மன்னித் துவிடுங்கள்...
இது உன்னுடைய குற்றமில்லை, ஏற்கெனவே நான் சொன்னேன் அல்லவா கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்பது எனக்கு நல்லதில்லையென்று...
முடிவு.

# வயிற்றுத் தொந்தரவு




ஜேஸன் ஒரு நேர்மையான மனிதன்; அவன் எப்போதுமே கஷ்டத்தில் இருக்கும் மக்களுக்கு உதவுவான். அவன் அரச மாளிகையின் நிர்வாகப் பணியை செய்து வந்தான்.
ஒரு நாள் மாளிகைக்கு ஒரு மதகுரு வந்திருந்தார். அவர் அங்கு தங்கியிருந்தபோது ஜேஸனின் நல்ல குணத்தைப் பற்றி அவருக்குத் தெரியவந்தது.
மதகுரு ஜேஸனை அழைக்கிறார்...
ஜேஸன், நீ ஒரு நேர்மையானவன். நான் உனக்கு விலங்குகளின் மொழியைப் புரிந்து கொள்ளும் ஒரு அசாதாரணமான சக்தியை வழங்குகிறேன்.
நன்றி குருவே.
ஜேஸன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.
இது என்ன மாதிரியான பரிசு, நான் விலங்குகளின் மொழியைப் புரிந்துகொண்டு என்ன செய்வது.


ஒருநாள், ராணி தனது வைர மோதிரத்தை தொலைத்துவிட்டார். ஜேஸன் மீது பொறாமை கொண்ட அங்கிருக்கும் ஒரு பணியாள் மன்னரிடம் ஜேஸனை சந்தேகப்படுவதாகத் தெரிவித்தான்.
அடுத்தநாள் மன்னர் ஜேஸனை அழைக்கிறார்...
ஜேஸன் நீ ராணியின் வைர மோதிரத்தை எடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட் டுள்ளாய்.
மன்னா, நான் ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டேன்.
நான் உனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தருகிறேன். நீ மோதிரத்தைக் கொடுத்துவிடு அல்லது கடுமையான தண்டனை கிடைக்கும்.
ஜேஸன் அதிர்ச்சியடைந்து அருகிலுள்ள தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள குளத்தின் அருகில் அமர்ந்து சிந்திக்கிறான்.
அடக்கடவுளே நான் என்ன செய்வது?


அந்த குளத்தில் சில வாத்துகள் நீந்திக்கொண்டிருந்தன. அவை அன்றைய நாள் பற்றி தங்களுக்குள் பேசிக்கொண்டன.
உனக்குத் தெரியுமா, நான் இன்று முழுவதும் மிகவும் பசியுடன் இருந்தேன். நான் தோட்டத்தில் நடந்து சென்ற போது அங்கு ஒரு மோதிரம் இருந்ததைப் பார்த்தேன்.
ஜேஸனால் அவை பேசிக்கொள்ளும் மொழியைப் புரிந்துகொள்ள முடிந்தது.
நான் யோசிக்காது அதனை விழுங்கிவிட்டேன். இதன் காரணமாக எனக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டுள்ளது.
ஓ!! நீதான் குற்றவாளியா..
ஜேஸன் அந்த வாத்தைப் பிடித்து மன்னரிடம் எடுத்துச் சென்றான்.
ஜேஸன், என்ன காரியம் செய்கிறாய்.



மன்னா, இதுதான் குற்றவாளி.
என்ன கூறுகிறாய்?
என்னை நம்புங்கள் மன்னா, தயவுசெய்து சமையல்காரரை அழையுங்கள்.
சமையல் காரரா?
ஆம் மன்னா. அவரை அழைத்து இதன் வயிற்றை வெட்டச் சொல்லுங்கள்.... உங்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது.
மன்னர் சமையல்காரரிடம் வாத்தின் வயிற்றை அறுக்குமாறு கூறுகிறார்.
மன்னா.. இங்கு பாருங்கள்....


சமையல்காரர் அந்த மோதிரத்தை மன்னரிடம் கொடுக்கிறார்.
அருமை, ஜேஸன் என்னை மன்னித்துவிடு. ஆனால், உனக்கு எப்படி இந்த வாத்துதான் மோதிரத்தை விழுங்கியது என்று தெரிய வந்தது?
ஜேஸன் மன்னரிடம் மதகுருவின் பரிசு மற்றும் தோட்டத்தில் நடந்த சம்பவத்தைக் கூறுகிறான்.
ஹா..ஹா..ஹா
நீ விரும்பினால் என்னுடைய ஆலோசகருள் ஒருவராக உன்னை நியமிக்கிறேன்.
ஓ! நன்றி மன்னா. ஆனால் நான் ஒரு படிக்காதவன். நான் உங்களுக்கு எந்தவிதத்திலும் உதவ மாட்டேன்.
மன்னா, எனக்கு பண உதவி அளியுங்கள். இதனால் என்னால் சொந்தமாக ஒரு தொழில் தொடங்க முடியும்.
சரி ஜேஸன்,


மன்னர், அவரது அமைச்சர்களிடம் ஜேஸனுக்குத் தேவையான உதவியைச் செய்யுமாறு கூறுகிறார்.
ஜேஸன் சொந்தமாக ஒரு தொழில் தொடங்கி கடுமையாக உழைத்தான். அதே சமயம் அவன் விலங்குகள் மற்றும் பறவைகளுடனும் அவற்றின் மொழியை அறிந்ததால் நேரம் செலவழித்தான்.
நீ ரொம்ப அழகாக இருக்கிறாய்....
ஓ!! நீ இதனை ஒவ்வொரு அணிலிடமும் கூறுவாயா?
ஹா... ஹா... ஹா....
முற்றிற்று



Buy Books & eBooks Online at www.indianvedicschool.com

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**
Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
✉ info@indianvedicschool.com